தமிழக சட்டப்பேரவையில் 2016-17 நிதியாண்டுக்கான திருத்தப்பட்ட பட்ஜெட்டை நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தாக்கல் செய்து வாசித்து வருகிறார். அதன் முக்கிய அம்சங்கள்:

*** தமிழகத்தின் திருத்திய பட்ஜெட்டில் புதிய வரிகள் ஏதும் விதிக்கப்படவில்லை.**

* மதுரையில் பால் பொருட்கள் தயாரிப்பு மையம் அமைக்கப்படும்.

* இலவச அன்னதான திட்டம் மேலும் 30 கோயில்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

**துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு:**

* மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு ரூ.9, 073 கோடி நிதி ஒதுக்கீடு.

* பள்ளிக் கல்வித்துறைக்கு ரூ.24,130 கோடி நிதி ஒதுக்கீடு.

* வேளாண்துறைக்கு ரூ.1,680.73 கோடி நிதி ஒதுக்கீடு.

* போக்குவரத்துத் துறைக்கு ரூ.1,295.08 கோடி நிதி ஒதுக்கீடு.

* முதல்வரின் மருத்துவ காப்பீடு திட்டத்துக்கு பட்ஜெட்டில் ரூ.928 கோடி நிதி ஒதுக்கீடு.

* நலத்திட்டங்கள், மானியங்களுக்காக ரூ.68,211.50 கோடி நிதி ஒதுக்கீடு.

* 2000 புதிய பேருந்துகள் வாங்க ரூ.125 கோடி நிதி ஒதுக்கீடு.

* சமூக நலத்துறைக்கு ரூ.4,512.32 கோடி நிதி ஒதுக்கீடு.

* மின் துறைக்கு ரூ.13,856 கோடி நிதி ஒதுக்கீடு.

* மாநில சமச்சீர் நிதியத்துக்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு

* தமிழ் வளர்ச்சித் துறைக்கு ரூ.32 கோடி ஒதுக்கீடு

* ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டு திட்டத்துக்கு ரூ.150 கோடி ஒதுக்கீடு.

* இலவச மடிக்கணினிகள், பாடநூல்கள், சீருடைகள் திட்டத்துக்கு ரூ.2,705 கோடி ஒதுக்கீடு.

* தீயணைப்புத் துறைக்கு ரூ.230.7 கோடி நிதி ஒதுக்கீடு.

* காவல்துறைக்கு ரூ,6,102.95 கோடி நிதி ஒதுக்கீடு.

* காவல்துறையை கணினிமயமாக்க ரூ.68 கோடி நிதி ஒதுக்கீடு.

* இலங்கை அகதிகளுக்காக ரூ.105.98 கோடி ஒதுக்கீடு.

* மாற்றுத் திறனாளிகளுக்காக ரூ,396.74 கோடி ஒதுக்கீடு.

* தாலிக்கு 8 கிராம் தங்கம் வழங்கும் திட்டத்துக்கு ரூ.703.16 கோடி நிதி ஒதுக்கீடு.

* தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்துக்கு ரூ.7.155 கோடி நிதி ஒதுக்கீடு.

* இயற்கை சீற்றங்களில் இருந்து விவசாயத்தைக் காக்க ரூ.239 கோடி நிதி ஒதுக்கீடு.

* மாநில தொழில் கூட்டமைப்பு நிதியத்துக்கு ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீடு.

* தொழில்துறை வளர்ச்சிக்காக ரூ.2,104.49 கோடி ஒதுக்கீடு.

* வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறைக்கு ரூ.652.78 கோடி நிதி ஒதுக்கீடு.

* சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுக்காக ரூ.470 கோடி நிதி ஒதுக்கீடு.

**தொலைநோக்கு திட்டம் 2023 இலக்குகளை அடைய மாநில அளவில் இந்த 5 இயக்கங்கள் வடிவமைப்பு:**

**1.** நீர் ஆதார மேலாண்மை மற்றும் குடி மராமத்து முறைக்கு புத்துயிரூட்டும் இயக்கம்.

**2.** குடிசைகளற்ற கிராமங்களையும், குடிசைப்பகுதிகளற்ற நகரங்களையும் உருவாக்கிட வீட்டு வசதிக்கான மாநில இயக்கம்.

**3.** வறுமை ஒழிப்பின் மூலம் ஏழைகளுக்குப் பொருளாதார உயர்வை வழங்குவதற்கான இயக்கம்.

**4.** தூய்மைத் தமிழகத்திற்கான இயக்கம்.

**5.** திறன் மேம்பாட்டிற்கான இயக்கம்.

**சலுகைகள் சில:**

* கறவை மாடு வாங்குவதற்கான நிதி ரூ.30,000-ல் இருந்து ரூ.35,000 ஆக உயர்த்தப்படும்.

* பண்ணை இயந்திரம் வாங்க விவசாயிகளுக்கு 50% மானியம் வழங்கப்படும்.

* **இந்த நிதியாண்டில் மாற்றுத்திறனாளிகளுக்கு 1,000 பெட்ரோல் ஸ்கூட்டர்கள் இலவசமாக வழங்கப்படும்.**

* சிறுபான்மையினர் மாதாந்திர உதவித்தொகை ரூ.1500 ஆக உயர்த்தப்படும்.

* இஸ்லாமிய உலமாக்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.ஆயிரத்தில் இருந்து ஆயிரத்து ஐநூறாக உயர்த்தப்படும்.

**அறிவிப்புகள்:**

* **லோக் ஆயுக்தா அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

* தமிழகத்தில் வரும் அக்டோபரில் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும். இதற்காக ரூ.183.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* உலக முதலீட்டாளர் மாநாடு மூலம் ரூ,23,000 கோடி அளவிலான முதலீடுகள் இதுவரை வந்துள்ளன.

* முதல்வரின் மருத்துவ காப்பீடு திட்டத்துக்கு பட்ஜெட்டில் ரூ,928 கோடி நிதி ஒதுக்கப்படும்.

* 7-வது ஊதியக்குழு பரிந்துரைகளை ஆராய்ந்து அமல்படுத்த உயர்மட்ட அலுவலர் குழு அமைக்கப்படும்.

* பொன்னேரி பிளாஸ்டிக் தொழில் முனையம் தேசிய அளவிளான மையமாக மாற்றப்படும்.

* ரூ.52.64 கோடியில் ஆற்றங்கரை ஓரங்களில் மரம் நடும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

*** மீனவர்களுக்கான மீன்பிடி தடைக்காலத்தில் வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.4,000-ல் இருந்து ரூ.5,000 ஆக அதிகரிப்பு.**

* அடுத்த ஓராண்டில் 3.50 லட்சம் இலவச பட்டா மனைகள் வழங்கப்படும்.

* ஆறுகள் புத்துயிர்த் திட்டத்தின் கீழ் வைகை, நொய்யலாறு தூர்வாரப்படும்.

* அடுத்த ஓராண்டில் மாணவர்களுக்கு 5.35 லட்சம் லேப்-டாப்கள் வழங்கப்படும்.

* அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஏழை மக்களுக்கு 10 லட்சம் வீடுகள் கட்டித்தரப்படும்.

* ரூ.422 கோடி செலவில் காவலர்களுக்கு 2,673 வீடுகள் கட்டித்தரப்படும்.

* வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலைவாய்ப்பு வழிகாட்டி மையமாக செயல்படும்.

**பட்ஜெட் ஒதுக்கீடு:**

* திருத்திய பட்ஜெட் மதிப்பீடு ரூ.1,48,175.09 கோடி

*** தமிழகத்தின் ஒட்டுமொத்தக் கடன் ரூ.2 லட்சத்து 52 ஆயிரத்து 431 கோடி ரூபாய்.**

*** தமிழகத்தின் வருவாய் பற்றாக்குறை ரூ.15,854.47 மோடி. மொத்த நிதிபற்றாக்குறை ரூ.40,533.84 கோடி.**